**ஜூன் – 15**


# TNPSC துளிகள்

- இந்திய நாடானது, 2026-28 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்திற்கு என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக சபைக்கு (ECOSOC) தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- கஜகஸ்தான், கிர்கிஸ்தான் குடியரசு, தஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளின் பங்கேற்புடன் இந்தியா - மத்திய ஆசியப் பேச்சு வார்த்தைக்கான 4வது கூட்டமானது புது டெல்லியில் நடைபெற்றது.
- பொது சுகாதாரம், உணவுப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழலை மிகப் பாதிக்கும் பூச்சி மேலாண்மையின் முக்கியத்துவத்தினை எடுத்துரைப்பதற்காக, ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 06 ஆம் தேதி உலகப் பூச்சி விழிப்புணர்வு தினமாக அனுசரிக்கப் படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## ‘சாதி, சமூகப் பிரிவு அற்றவர்’ சான்றிதழ்கள்




- சென்னை உயர் நீதிமன்றம் எந்தவொரு மதம் அல்லது சாதி கொண்டும் அடையாளம் காணப்பட விரும்பாத நபர்களுக்கு ‘சாதி, சமூகப் பிரிவு அற்றவர்’ என்ற வகையில் சான்றிதழ்களை வழங்க வருவாய் அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கும் ஒரு அரசு உத்தரவை (G.O.) பிறப்பிக்குமாறு தமிழக அரசைக் கோரியுள்ளது.
- முன்னதாக, 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், வருவாய் அதிகாரிகளுக்கு அத்தகைய வகையிலானச் சான்றிதழை வழங்குவதற்கு அதிகாரம் இல்லாததால், விண்ணப்பதாரருக்கு ‘சாதி, சமூகப் பிரிவு அற்றவர்’ என்ற சான்றிதழை வழங்குமாறு திருப்பத்தூர் தாசில்தாருக்கு உத்தரவிட உயர்நீதிமன்றம் மறுத்துவிட்டது.
- முன்னதாக, 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 05 ஆம் தேதியன்று திருப்பத்தூர் தாசில்தார், 2022 ஆம் ஆண்டு மே 27 ஆம் தேதியன்று கோயம்புத்தூர் தாசில்தார் மற்றும் 2022 ஆம்

ஆண்டு ஆகஸ்ட் 18 ஆம் தேதியன்று அம்பத்தூர் தாசில்தாரால் 'சாதி, சமூகப் பிரிவு அற்றவர்' போன்ற சான்றிதழ்கள் வழங்கப் பட்டுள்ளன.

# தேசியச் செய்திகள்

## ஆயுஷ் நிவேஷ் சார்த்தி இணைய தளம்





- இந்திய அரசின் கீழ் ஆயுஷ் துறை அமைச்சகமானது, ஆயுஷ் துறைக்கான பிரத்தியேக முதலீட்டாளர்களுக்கான சில வசதிகளை வழங்கச் செய்யும் 'ஆயுஷ் நிவேஷ் சார்த்தி' எனும் இணைய தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த இணைய தளம், இன்வெஸ்ட் இந்தியா (Invest India) என்ற அமைப்புடன் இணைந்து உருவாக்கப் பட்டுள்ளது.
- இது உள்நாட்டு மற்றும் உலகளாவிய முதலீட்டாளர்களுக்கு என்று ஒரு ஒருங்கிணைந்த இடைமுகத்தை வழங்குகிறது.
- இந்தத் துறைக்குத் தானியக்க வழி மூலம் 100% அந்நிய நேரடி முதலீடு அனுமதிக்கப் படுகிறது.

## வயது வந்தோரின் கல்வியறிவில் முன்னணியில் உள்ள மாநிலங்கள் 2025


- டெல்லி, திரிபுரா மற்றும் தமிழ்நாடு ஆகியவை வயது வந்தோர் கல்வியறிவு மற்றும் கல்வி தொடர்பான சவால்களைக் கையாள்வதில் சிறந்த செயல்திறன் கொண்டவை

ஆகத் திகழ்கின்றன.

- உத்தரக்காண்ட், குஜராத் மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் சான்றிதழ் கல்விகளில் பதிவான முடிவுகளில் பின்தங்கியுள்ளன.
- இந்தத் தரவானது அடிப்படைக் கல்வியறிவு மற்றும் எண்ணியல் மதிப்பீட்டுத் தேர்வு (FLNAT) மூலம் வெளியிட்டப்பட்டது.
- தமிழ்நாடு மாநிலமானது, FLNAT தேர்வில் கலந்து கொண்ட 5,09,694 நபர்கள் சான்றிதழ் பெற்றதுடன் 100 சதவீத வெற்றி விகிதத்தைப் பதிவு செய்துள்ளது.
- முன்னதாக, 2023 ஆம் ஆண்டில் மார்ச் மற்றும் செப்டம்பர் ஆகிய மாதங்களில் இரண்டு FLNAT தேர்வுகள் நடத்தப்பட்டன.




## CROPIC முன்னெடுப்பு




- வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் ஆனது CROPIC முன்னெடுப்பைத் தொடங்க திட்டமிட்டுள்ளது.
- இது வேளாண் நிலங்களின் புகைப்படங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு வகை

அடிப்படையிலான மாதிரிகளைப் பயன்படுத்திப் பயிர்கள் மீதான பல தகவல்களைச் சேகரிப்பதற்கான ஓர் ஆய்வாகும்.

- இந்த CROPIC என்பது பயிர்களின் நிகழ்நேரக் கண்காணிப்புகள் மற்றும் புகைப்படச் சேகரிப்பைக் குறிக்கிறது.
- இப்பயிர்களானது அவற்றின் பயிரிடல் சுழற்சியின் போது, செயற்கை நுண்ணறிவின் மூலம் நான்கு-ஐந்து முறை என புகைப்படம் எடுக்கப்பட்டு, மேலும் அந்தப் பயிர்களின் ஆரோக்கியம் மற்றும் பருவகால இழப்புகளை நன்கு மதிப்பிடுவதற்கு வேண்டி இந்தப் புகைப்படங்கள் பகுப்பாய்வு செய்யப்படுகிறது.
- பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனாவிற்காக (PMFBY) இந்த ஆய்வினை நடத்த அந்த அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## உலக வங்கியின் புதுப்பிக்கப்பட்ட வறுமைக் கோட்டு நிலை

| Year | Poverty Line (PPP/day) | Poverty rate (%) | People below poverty line (in million) |
|---|---|---|---|
| 2011-12 | $2.15 (2017) | 16.22 | 205.9 |
| 2011-12 | $3 ( 2021) | 27.12 | 344.5 |
| 2022-23 | $2.15 (2017) | 2.35 | 33.6 |
| 2022-23 | $3 ( 2021) | 5.25 | 75.2 |

Source: Govt factsheet

- உலக வங்கியானது, அதன் வறுமைக் கோட்டின் உச்ச வரம்பினை ஒரு நாளைக்கு 3 டாலராக உயர்த்தியுள்ளது.
- இது குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் இந்த வரம்பு ஒரு நாளைக்கு சுமார் 3.65 டாலரிலிருந்து 4.20 டாலராகவும், உயர் மட்ட நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் 6.85 டாலரிலிருந்து 8.40 டாலராகவும் அதிகரித்துள்ளது.
- குறைந்த நடுத்தர வருமானம் கொண்ட நாட்டில் (LMIC) வறுமை விகிதம் 33.7 சதவீதப் புள்ளிகள் குறைந்துள்ளது.
- 2011-12 மற்றும் 2022-23 ஆகிய ஆண்டுகளுக்கு இடையிலான தசாப்தத்தில், இந்தியா 171 மில்லியன் மக்களை தீவிர வறுமை நிலையிலிருந்து மீட்டுள்ளது.
- இந்தியாவின் தீவிர வறுமை விகிதம் ஆனது, 2011-12 ஆம் ஆண்டில் 27.1 சதவீதத்தில் இருந்து ஒரு தசாப்தத்தில் 5.3% ஆகக் குறைந்துள்ளது.
- இந்தியாவில், 2024 ஆம் ஆண்டில் சுமார் 54,695,832 பேர் ஒரு நாளைக்கு 3 டாலருக்கும் குறைவான வருமானத்தில் வாழ்ந்தனர்.
- இதனால், ஒரு நாளைக்கு 3 டாலர் (2021 ஆம் ஆண்டு PPP - சதவீத மக்கள் தொகை) என்ற வறுமை விகிதம் ஆனது 2024 ஆம் ஆண்டில் 5.44% ஆகும்.
- 2011-12 மற்றும் 2022-23 ஆகிய ஆண்டுகளுக்கு இடையிலான காலத்தில் தீவிர வறுமை விகிதம் 16.2 சதவீதத்திலிருந்து 2.3% ஆகக் குறைந்துள்ளது.

- கிராமப்புறத் தீவிர வறுமை 18.4 சதவீதத்திலிருந்து 2.8% ஆகவும், நகர்ப்புறத்தில் 10.7 சதவீதத்திலிருந்து 1.1% ஆகவும் குறைந்துள்ளது.
- 2011-12 மற்றும் 2022-23 ஆகிய ஆண்டுகளுக்கு இடையிலான காலத்தில் 269 மில்லியன் இந்தியர்கள் தீவிர வறுமைக் கோட்டிலிருந்து விடுபட்டனர்.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் சந்தை மூலதனம் ஜூன் 2025

- 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத் தொடக்கத்தில் இருந்து இந்தியாவின் பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள், சந்தை மூலதனத்தில் சுமார் 1 டிரில்லியன் டாலர்கள் சேர்த்து 5.33 டிரில்லியன் டாலரை எட்டியுள்ளன.
- சதவீதத்தின் அடிப்படையில், சந்தை மூலதனம் என்பது 21 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.
- இது உலகின் முதல் 10 பங்குச் சந்தைகளில் மிக உயர்ந்த அதிகரிப்பாகும்.
- இந்த காலக் கட்டத்தில் அதன் சந்தை மூலதனம் சுமார் 14 சதவீதம் உயர்ந்துள்ளதுடன் உலகளவில் ஜெர்மனியானது, இந்தியாவிற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் பெருமளவு இலாபத்தைப் பதிவு செய்துள்ளது.
- அமெரிக்கா, சீனா, ஜப்பான் மற்றும் ஹாங்காங் ஆகியவற்றிற்குப் பிறகு தற்போது உலகளவில் ஐந்தாவது பெரியச் சந்தையாக இந்தியா உருவெடுத்துள்ளது.





# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஜிம்பாப்வே யானைகளைக் கொல்லுதல் 2025

- ஜிம்பாப்வே சேவ் வேலி என்ற காப்பகத்தில் குறைந்தது 50 யானைகளை கொல்லத்

திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

- இந்தக் காப்பகத்தில் தற்போது சுமார் 2,550 யானைகள் உள்ளதாக ஜிம்பாப்வே பூங்காக்கள் மற்றும் வனவிலங்கு மேலாண்மை ஆணையம் (ஜிம்பார்க்ஸ்) தெரிவித்து உள்ளது.
- இந்த எண்ணிக்கையானது, 800 என்ற அதன் சுற்றுச்சூழல் தாங்கு திறனை விட மிகவும் அதிகமாக உள்ளது.
- இதில் கொல்லப்படும் யானைகளின் இறைச்சியானது அங்கு உள்ளூர் சமூகங்களிடம் விநியோகிக்கப் படும்.
- போட்ஸ்வானா என்ற நாட்டிற்கு அடுத்தபடியாக, உலகின் மிகப்பெரிய யானைகள் எண்ணிக்கையைக் கொண்ட நாடுகளில் ஒன்றாக ஜிம்பாப்வே உள்ளது.
- சமீபத்திய ஆண்டுகளில் ஜிம்பாப்வே யானைகளைக் கொல்லும் பணியில் ஈடுபடுவது இது இரண்டாவது முறையாகும்.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## CCPI குறியீடு 2025

- 64 நாடுகள் ஆனது உலகளாவியப் பசுமை இல்ல வாயு உமிழ்வில் 90 சதவீதத்திற்கும் அதிகமான உமிழ்விற்கு காரணமாக உள்ளன.
- 2025 ஆம் ஆண்டிற்கான பருவநிலை மாற்றச் செயல்திறன் குறியீட்டில் 22 நாடுகள் மட்டுமே முன்னேற்றம் அடைந்துள்ள அதே நேரத்தில் 42 நாடுகள் பின்தங்கியுள்ளன.
- இந்த ஆண்டு, இந்தக் குறியீட்டின் முதல் மூன்று இடங்கள் காலியாகவே உள்ளன.

- 2025 ஆம் ஆண்டில் பருவநிலை மாற்றத்தைத் தணிக்கச் செய்வதற்கான அனைத்து அளவுருக்கள் கொண்டு மதிப்பிடும் போது எந்த ஒரு நாடும் 'முதன்மை இடங்களில்' தரவரிசைப் படுத்தப்படவில்லை.
- டென்மார்க் நாடானது இத்தர வரிசையில் அதன் முன்னணி (#4) இடத்தினைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- அதைத் தொடர்ந்து நெதர்லாந்து, ஐக்கியப் பேரரசு, பிலிப்பைன்ஸ், மொராக்கோ, நார்வே மற்றும் இந்தியா (10வது இடம்) உள்ளன.
- இதற்கு நேர்மாறாக, சீனா, அமெரிக்கா, கனடா, ஐக்கிய அரபு அமீரகம் (UAE) மற்றும் பல நாடுகள் இத்தர வரிசையில் கடைசியாக உள்ளன.

| Rank 2025 | Country | Overall CCPI Score 2025 |
|---|---|---|
| 1 | – | – |
| 2 | – | – |
| 3 | – | – |
| 4 | Denmark | 78.37 |
| 5 | Netherlands | 69.6 |
| 6 | United Kingdom | 69.29 |
| 7 | Philippines | 68.41 |
| 8 | Morocco | 68.32 |
| 9 | Norway | 68.21 |
| 10 | India | 67.99 |

## உலக கடல்சார் மீன் வளங்களின் நிலை குறித்த மதிப்பாய்வு – 2025




- இந்தப் புதிய அறிக்கையை உணவு மற்றும் வேளாண் அமைப்பு (FAO) வெளியிட்டு உள்ளது.
- உலகளவில் அனைத்து மீன்வள இருப்புகளில் 64.5 சதவீதம் ஆனது உயிரியல் ரீதியாக ஒரு நிலையான அளவில் சுரண்டப் படுகின்ற அதே நேரத்தில் 35.5 சதவீத இருப்புகளில் அளவிற்கு அதிகமாக மீன்கள் பிடிக்கப்படுகின்றன.

- வடகிழக்கு பசிபிக் மற்றும் தென்மேற்கு பசிபிக் பகுதிகள் மிக அதிக நிலைத் தன்மை விகிதங்களைக் கொண்டுள்ளன.
- கிழக்கு இந்தியப் பெருங்கடலில் சுமார் 72.7 சதவீத மீன்வள இருப்புகள் ஒரு நிலையான முறையில் சுரண்டப் படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

# முக்கிய தினங்கள்

## சட்டவிரோதமான, அறியப்படாத மற்றும் கட்டுப்பாடற்ற (IUU) பல்வேறு மீன்பிடி நடவடிக்கைகளுக்கு எதிரான போராட்டத்திற்கான சர்வதேச தினம் 2025 - ஜூன் 05




- சட்ட விரோதமான மற்றும் ஒரு நிலையான முறையிலான மீன்பிடி நடைமுறைகளை நீக்குவதன் மூலம் உலகின் மீன்வளம், கடல் சார் பல்லுயிர்ப்பெருக்கம் மற்றும் கடல் சார் வளங்களைச் சார்ந்திருக்கும் மில்லியன் கணக்கான மக்களின் மிகப்பெரும் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதே இதன் நோக்கமாகும்.
- இந்த ஆண்டானது, 2016 ஆம் அநாடு ஜூன் 05 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்த துறைமுகங்களுக்கான அரசின் நடவடிக்கைகள் குறித்த சட்டப்பூர்வ ஒப்பந்தத்தின் (PSMA) ஒன்பதாவது ஆண்டு நிறைவாகும்.
- இந்த ஒப்பந்தமானது, சட்ட விரோதமான, அறியப்படாத மற்றும் கட்டுப்பாடற்ற (IUU) மீன்பிடித்தலைக் குறிப்பாக ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உலக உணவுப் பாதுகாப்பு தினம் 2025 - ஜூன் 07


- கெட்டுப்போன உணவினால் ஏற்படும் அபாயங்கள் குறித்து பொதுமக்களின் விழிப்பு உணர்வை அதிகரிப்பதையும், உணவுச் சங்கிலி முழுவதும் உள்ள அபாயங்களைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்ட முன்னெடுப்புகளை ஊக்குவிப்பதையும் இது

ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.

- முதல் உலகளாவிய உலக உணவுப் பாதுகாப்பு தினம் ஆனது 2019 ஆம் ஆண்டு ஜூன் 07 ஆம் தேதியன்று நடைபெற்றது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Food safety – science in action" என்பதாகும்.




## உலக மூளைக் கட்டி நோய் தினம் 2025 - ஜூன் 08




- இது மூளைக் கட்டிகளின் தீவிரத் தன்மை, முன்கூட்டியேக் கண்டறிதல் மற்றும் தடுப்பு குறித்து பொது மக்களுக்குக் கல்வியளிப்பதே நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மூளைக்கட்டி என்பது மனித மூளையின் முறையான செயல்பாட்டை வெகுவாகச் சீர் குலைக்கின்ற மூளையில் உள்ள திசுக்களின் அல்லது அதன் படலத்தின் (மெனிங்ஸ்) அசாதாரண வளர்ச்சியாகும்.

- இந்தத் தினமானது, முதன்முதலில் ஜெர்மனி மூளைக் கட்டி நோய்ச் சங்கத்தினால் 2000 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

## உலகப் பெருங்கடல் தினம் 2025 - ஜூன் 08

- இந்தத் தினமானது முதன்முதலில் 1992 ஆம் ஆண்டு ரியோ டி ஜெனிரோ நகரில் நடைபெற்ற புவி உச்சி மாநாட்டில் முன்மொழியப்பட்டது.
- இது அரசாங்கங்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து செயல்படும் வளமானப் பெருங்கடல் மற்றும் நீடித்த நிலையான பருவநிலைக்கான கூட்டு நடவடிக்கையை ஊக்குவிக்கிறது.
- பிரான்சில் உள்ள நைஸ் நகரில் இந்த ஆண்டின் உலகளாவிய அனுசரிப்பு நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Wonder: Sustaining what sustains us" என்பதாகும்.




## பவளப் பாறை முக்கோணப் பகுதி தினம் 2025 - ஜூன் 09

- இந்த ஒரு முன்னெடுப்பானது, மலேசியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், சாலமன் தீவுகள், பப்புவா நியூ கினியா, தைமோர்-லெஸ்டே ஆகிய ஆறு நாடுகளின் பலதரப்புக் கூட்டாண்மை ஆகும்.
- பெரும்பாலும் 'கடல்களின் அமேசான்' என்றும் அழைக்கப்படும் இந்தப் பவளப்பாறை முக்கோணப் பகுதியானது ஒரு கடல் சார் பல்லுயிர்ப் பெருக்க மண்டலமாகும்.
- இங்கு 15 தனித்துவமான இனங்கள் காணப்படுகின்றன மற்றும் உலகளாவியப் பவளப் பாறை வாழ் மீன் இனங்களில் இங்கு சுமார் 37% காணப்படுவதுடன், உலகின் மிகவும் அதிகப் பன்முகத் தன்மை கொண்ட பவளப்பாறை வாழ் மீன்களைக் கொண்டுள்ளது.
- புவியின் மேற்பரப்பில் சுமார் 1.5% பரப்பில் மட்டுமே இது பரவிக் காணப் பட்டாலும் இப்பவளப் பாறை முக்கோணப் பகுதியானது புவியின் பவளப்பாறைகளில் சுமார் 30 சதவீதத்தினைக் கொண்டுள்ளது.

- இந்தத் தினத்திற்கான இந்த ஆண்டின் கருத்துரு “One Triangle, Infinite Beauty” என்பதாகும்.




**நாகரிகங்களுக்கிடையேயான பேச்சுவார்த்தைக்கான சர்வதேச தினம் 2025 - ஜூன் 10**




- சீனாவால் முன்மொழியப்பட்ட இத்தினமானது 2024 ஆம் ஆண்டில் 80க்கும் மேற்பட்ட நாடுகளால் இணைந்து நிதியுதவி வழங்கப்படுகிறது.
- உலகளாவிய அமைதியை வளர்ப்பதில் பேச்சுவார்த்தையின் மிக முக்கியப் பங்கை எடுத்துக்காட்டும் அதே வேளையில் கலாச்சாரப் பன்முகத்தன்மையை மதிப்பதன் ஒரு முக்கியத்துவத்தையும் இத்தினம் குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- இந்த ஆண்டில் ஹெஹே நாகரிக மன்றம் ஆனது தாய்லாந்தின் பாங்காக் நகரில்

நடைபெறும்.

- இந்த நிகழ்வின் கருத்துரு, "Harmonious and Coexistence: Promoting the Prosperity and Progress of Civilizations" என்பதாகும்.

## உலக முதியோர் வன்கொடுமை குறித்த விழிப்புணர்வு தினம் 2025 - ஜூன் 15


- சர்வதேச முதியோர் வன்கொடுமை தடுப்பு வலையமைப்பு மற்றும் உலக சுகாதார அமைப்பால் இது உருவாக்கப்பட்டது.
- இத்தினமானது விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் முதியோர் வன்கொடுமை மற்றும் புறக்கணிப்பு பற்றிய மிகச் சிறந்த புரிதலை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு: “Addressing Abuse of Older Adults in Long Term Care Facilities: Through Data and Action” என்பதாகும்.




## வெளிநாட்டில் உள்ள குடும்ப உறுப்பினர்கள் பணம் அனுப்புதலுக்கான சர்வதேச தினம் 2025 - ஜூன் 16

- இத்தினமானது, நிலையான சர்வதேச மேம்பாட்டிற்கு, 250 மில்லியன் புலம்பெயர்ந்தத் தொழிலாளர்கள் அளித்த நிதிப் பங்களிப்புகளை அங்கீகரிக்கிறது.
- உலகளாவிய மக்கள்தொகையில் 3.4% பேர் சர்வதேசப் புலம்பெயர்ந்தோர் ஆவர் என்ற நிலையில் அவர்கள் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தோராயமாக 9.4% என்ற அளவிற்குப் பங்களிக்கின்றனர்.

- இந்த ஆண்டு, IDFR பிரச்சாரமானது குறைவான மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் நீடித்த நிலையான மேம்பாட்டு இலக்குகளை (SDG) அடைவதில், பணம் அனுப்புவதன் தாக்கத்தை மிக முழுமையாக அதிகரிக்க என புதுப்பிக்கப்பட்ட மற்றும் விரிவாக்கப்பட்ட உறுதிப்பாட்டைக் கோருகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★